**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 90/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(சக்கரபாணி)**
**06.11.2024**

**3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

**1.** வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் நான் தான் விவரம் சொன்னேன். எனது நிரூபனவாக்குமூலம் பத்தி 4ல் சொல்லியுள்ளது போல் நான் சொத்துக்களை விற்கும் நிலையில் இருப்பதை அறிந்துகொண்டு 1ம் பிரதிவாதி விற்று தருவதாக கூறினார் என சொல்லியுள்ளேன், அந்த சமயத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா இடத்தில் கடை வைத்திருந்தார்களா என்றால் நெடுஞ்சாலை இடத்தில் கடை வைத்திருந்தார்கள். தாவா சொத்தை நான் 1973ல் கிரையம் வாங்கிய சமயத்தில் இருந்து 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா இடத்தில் கடை வைத்திருந்தார்கள் என்றும் அவர்களை வெளியேற்ற 2019ல் தான் மனு கொடுத்தேன் என்றால் நெடுஞ்சாலை இடத்தில் கடை வைத்திருந்தார்கள் எந்த வருடம் மனு கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை.

2. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு இருந்தே 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா இடத்தில் தான் கடை வைத்திருந்தார்கள் என்றும் அந்த விவரம் நான் கிரையம் வாங்கும் சமயத்திலேயே தெரிந்திருந்தும் 2019ல் தான் நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரியல்ல. 1973ல் தாவா சொத்தை கிரையம் பெற்று 1974ல் தாவா இடத்தில் வீடு கட்டி குடியிருந்தேன் என்பதை நிரூபனம் செய்வதற்கு வீட்டு வரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. நான் OFT பகுதியில் குடியிருந்து வந்த சமயத்திலும் தாவா சொத்தை தொடர்ந்து பராமரித்து வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் நெடுஞ்சாலை இடத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் கடை வைத்துள்ளதாக சொல்லியுள்ளது தாவா சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. 1 முதல் 4 பிரதிவாதிகளை கடையை காலி செய்ய சொல்லி 2000ம் வருடத்தில் நெடுஞ்சாலை துறையில் இருந்து அறிவிப்பு வந்ததாகவும் அதன்பிறகு 5 மாதத்தில் அந்த இடத்தை அவர்கள் காலிசெய்து விட்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

4. 1 முதல் 4 பிரதிவாதிகளை அந்த இடத்தில் இருந்து காலி செய்து கொள்ளுமாறு அரசாங்கத்திடமிருந்து வந்ததாக எந்த அறிவிப்பையும் நான் மனு தாக்கல் செய்து பெற்று வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2010ம் வருடம் வரை தாவா இடத்தில் எவ்வித வில்லங்கமும் இல்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2010ம் வருடத்திற்கு பிறகு 9 வருடங்களாக தான் தாவா இடத்தை நான் பார்க்கவில்லை என்றும் அதற்கு முன்பு வரை தாவா இடத்தை நான் பராமரித்து வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. தாவா இடத்தை பொருத்து ஏதாவது பதிவு ஆவணம் ஏற்படுத்தி அதன்பிறகு வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் தான் 2019ம் ஆண்டு எனது மனைவி பெயரில் தான செட்டில்மெண்ட் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 27.2.2019ம் தேதி வரை தாவா சொத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்திருந்தது எனக்கு தெரியாது என வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

6. 27.2.2019ம்தேதி அன்று 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்திருந்த விவரம் தெரியவந்த பிறகு மாத்துார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். அவ்வாறு புகார் கொடுக்கப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் தாவா சொத்து எனது சொத்து என்பதற்கு என்ன ஆவணம் உள்ளது அளவை செய்துவிட்டு பிறகு வாருங்கள் என காவல்துறையினர் சொல்லிவிட்டார்கள். காவல்நிலையத்தில் கொடுத்த புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. தாவா சொத்துக்கள் பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருவதால் குறிப்பிட்ட தொகையை பெற்றுக்கொள்ளுமாறு சொல்லி பிரதிவாதிகள் என்னிடம் அனுகியதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் 4000 சதுர அடி என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகள் அவர்களுக்கு தாவா சொத்தில் 1500 சதுர அடி பாத்தியம் என எதிர்கோரிக்கை மனு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8. தாவா இடத்தில் 3,4 பிரதிவாதிகள் வீடு கட்டி குடியிருந்து வரும் 1500 சதுரஅடி அவர்களுக்கு பாத்தியம் என்றும் அந்த இடம் அண்ணாநகர் 4ம் வீதிக்கு தெற்கு திருச்சி – புதுக்கோட்டை ரோட்டிற்கு மேற்கிலும் அமைந்துள்ளது என எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார்கள் என்றால் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொன்டேன். 1 ,2 பிரதிவாதிகள் 800 சதுர அடி மற்றும் 3,4 பிரதிவாதிகள் 500 சதுர அடி குடியிருப்பு பகுதியாக

வைத்துள்ளார்கள். 3,4 பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்து அவர்களது பரம்பரை சொத்து என்றால் சரியல்ல.

9. 4ம் பிரதிவாதியின் தாத்தா ஆறுமுகத்திற்கு பாத்தியப்பட்டு 1964ம் வருடத்தில் இருந்து அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் ஆறுமுகம் வீடு கட்டி குடும்பத்துடன் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி ஆறுமுகத்திற்கு 3ம் பிரதிவாதியின் கணவரும் 4ம் பிரதிவாதியின் தகப்பனாருமான முனியான்டி மட்டுமே வாரிசு என்றும் ஆறுமுகம் இறந்த பிறகு முனியான்டி தான் தாவா இடத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. முனியான்டி இறந்த பிறகு 3,4 பிரதிவாதிகள் தாவா இடத்தில் இருந்து கூரை வீட்டை மாற்றி ஆஸ்பெட்டாஸ் வீடு அமைத்து நாளது வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகி குழந்தைகளுடன் தாவா இடத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல.

10. தாவா இடத்தில் 3,4 பிரதிவாதிகளின் வீட்டு முகவரி எண் 56, அண்ணாநகர் மாத்தூர், திருச்சி என எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3,4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நான் எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் விஸ்வநாதஜயர் மனைகளாக்கி விற்பணை செய்தார் என வழக்குரையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1964 முதல் 3,4 பிரதிவாதிகளின் முன்னோர் அந்த இடத்தில் எனக்கு தெரிந்தே அனுபவம் செய்து வந்தார்கள் என்றும் 3,4 பிரதிவாதிகளின் இடத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

11. 3,4 பிரதிவாதிகள் தாவா இடத்தில் 12 வருடங்களுக்கு மேலாக சுமார் 60 வருடங்களாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் குடியிருந்து வரும் இடத்தை நான் எந்த காலத்திலும் இடையூறு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இடையூறு செய்யாத காரணத்தால் தான் எதிர்கோரிக்கை மனுவில் கண்ட சர்வே எண் 1/1 ல் கண்ட 1500 சதுர அடிக்கு 3,4 பிரதிவாதிகள் எதிரிடை பாத்தியம் கோருகிறார்கள் என்றால் சரியல்ல. எனவே வழக்கில் நான் கோரியுள்ள சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் பயனீட்டு தொகை(Mesne profit) எதுவும் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.

12. தாவா சொத்தில் 3,4 பிரதிவாதிகள் குடியிருந்து வரும் பகுதி அவர்களுக்கு தான் சொந்தம் என்று அருகில் உள்ள நபர்களை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 3,4 பிரதிவாதிகள் தொடர் அனுபவத்தில்

இருப்பதை தெரிந்துகொன்டே கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டு தற்போது 2019ம் ஆண்டு வீண் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எனது வழக்குமூலம் தவறு என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை**